**கமநல அபிவிருத்தி நிதியம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமநல அபிவிருத்தி நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான்

முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுப்பெறுமதி ரூபா 32,000 ஆன 08 நீர்நிலைகள் பற்றிய தொகுப்புகளின் பற்றாக்குறை, கூட்டுப்பெறுமதி ரூபா 34,560 ஆன 108 நீர்நிலைகள் பற்றிய கைநூல்களின் பற்றாக்குறை மற்றும் மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்ட ரூபா 12,800 தொகையான 40 | நீர்நிலைகள் பற்றிய தொகுப்புகள் மற்றும் கைநூல்கள் தொடர்பான தகவல்கள் நாளதுவரையாக்கப் படாமையின் காரணமாக இந்தப் பற்றாக்குறை ஏற்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது சரியான மீதியை உள்ளடக்கி நிதிக் கூற்றுக்களில் தேவையான சீராக்கங்கள் | நீர்கொள்கலன்கள் மற்றும் கைநூல்களின் பெறுமதி சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நீர்நிலைகள் பற்றிய கைநூல்களின் பெறுமதி என்பன நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது நீர்நிலைகள் பற்றிய தொகுப்புகள் மற்றும் கைநூல்களின் பெறுமதி கணக்குகளில் குறைக்கப்படாமையின் காரணமாக இருப்பு மீதி ரூபா 79,360 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்படுமென அறியத் தருகின்றோம். | |
| (ஆ) | முன்னைய ஆண்டிற்குரியதாக கிடைத்த ரூபா 5,531,514 தொகையான 02 சக்கர டிறக்டர் தவணை வருமானம் மற்றும் ரூபா 18,500 தொகையான நீர்ப்பம்பிகளின் தவணை வருமானம் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்படாமல் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 5,550,014 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் போது முன்னைய ஆண்டிற்குரியதாக கிடைக்கின்ற டிறக்டர் தவணை பணம் மற்றும் நீர்ப்பம்பி தவணைப் பண வருமானம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படுமாயின் உரிய ஆண்டில் செலவினங்களை மேற்கொள்ளும் போது பிரச்சினைகள் எழுகின்றமையால் மீளாய்வாண்டிற்குரியதாக கிடைத்த டிறக்டர் தவணைப் பணம் மற்றும் நீர்ப்பம்பி தவணைப் பண வருமானம் என்பன திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்படாமல் ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டிற்குரிய வருமானம் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய கமநல சேவை நிலையங்களிலிருந்து கிடைக்க வேண்டிய 20 சதவீத ஏக்கர் வரி வருமானம் ரூபா 13,274,077 நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய கிடைக்க வேண்டிய 20 சதவீத ஏக்கர் வரி வருமானம் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கமநல சேலை நிலையங்களில் 2021 ஆம் ஆண்டிற்குரிய வயல் காணி ஏனைய பணிகளுக்காக ஈடுபடுத்துதல் மற்றும் வயல் காணி அல்லாது இருந்தமையை | 2021 இற்கு முன்னைய ஆண்டிற்கு உரியதாக கிடைக்க வேண்டிய ரூபா 3,911,914 பெறுமதி கணிப்பீடு செய்தல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மேற்கொள்ளப்படாதிருந்த | ஆண்டிற்குரிய மற்றும் முன்னைய ஆண்டுகளில் கிடைக்க வேண்டிய வருமானம் சரியான பிரகாரம் இனங்கண்டு நிதிக்கூற்றுக்களின் |

| | | | |
|---|---|---|---|
| | உறுததிப்படுத்துவதற்கு அறவிடப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணம் கிடைத்த வருமானத்தில் கமநல அபிவிருத்தி நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய 40 சதவீதமான ரூபா 1,549,148 மற்றும் 2021 இற்கு முன்னைய ஆண்டிற்குரியதாக கிடைக்க வேண்டிய ரூபா 3,911,914 என்பன நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | துடன் அது 2022 மார்ச் 31 ஆந் திகதி வரையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (உ) | 2020 இன் கணக்காண்டிற்கு உரிய கணக்காய்வு அறிக்கையில் கணக்கீட்டு குறைபாடுகளின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 சக்கர டிறக்டர் கடன்பட்டோர் ரூபா 2,551,196 குறைவாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அது மீளாய்வாண்டின் போதும் சரி செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த நிலைமையின் காரணமாக 02 சக்கர டிறக்டர் கடன்பட்டோர் மீதி மற்றும் தேறாத தவணைப் பணக் கணக்கு என்பன அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சரியான கடன்பட்டோர் நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டு வரப்படல் வேண்டும். |

**1.5.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2KR செயற்திட்ட நீர்ப்பம்பி கடன்பட்டோர் மீதி ரூபா 2,468,003 ஆக இருந்த போதும் கடன்பட்டோர் பட்டோலையின் பிரகாரம் மீதி ரூபா 2,507,003 ஆக காணப்பட்டது. இதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் நீர்ப்பம்பி கடன்பட்டோர் மீதி | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகததர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களின் மீதியை உரிய பட்டோலையுடன் இணக்கம் செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் தேறாத நீர்ப்பம்பி தவணைப் பணக் கணக்கின் மீதி என்பன ரூபா 39,000 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் புத்தகங்களின் பிரகாரம் பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 290,216,591 ஆக இருந்த போதிலும் திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் மீதி ரூபா 290,862,305 ஆகும். அதன் பிரகாரம் நீண்டகாலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 645,714 வேறுபாட்டை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேறுபாட்டில் உள்ளடங்கியுள்ள ரூபா 6,433 தொகை 2022 பெப்ரவரி 23 ஆந் திகதி சரிசெய்யப்பட்டுள்ளது. ரூபா 651,797 வேறுபாடு தொடர்பாக பரீட்சிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு வேறுபாட்டிற்கு தாக்கமளித்த கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டு சரிசெய்வதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல் பொருத்தமானது என முன்மொழிந்திருந்தது. எனினும், அதற்குரிய ஆவணங்கள் மிகவும் பழையதாக இருந்தமையால் அந்த ஆவணங்களை கண்டறிவதற்கு காணப்பட்ட அதிக கஸ்டம் மற்றும் அதற்காக கணிசமான காலஅளவு எடுக்கின்றமை காரணமாக இது தாமதமடைந்திருந்தது. | பொது வைப்புக் கணக்கில் காணப்படுகின்ற வேறுபாடுகள் தாமதமின்றி தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

## 1.6 கிடைக்க வேண்டிய பணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கமநல சேவை நிலையங்கள் மற்றும் கமநல அமைப்புக்களுக்கு 2010 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட 02 சக்கர டிறக்டர் டிரெயிலர் மற்றும் 04 சக்கர டிறக்டர் டிரெயிலர் என்பவற்றிற்காக 09 வருட காலங்கள் முதல் அறவிட வேண்டிய ரூபா 4,112,575 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி | 2020, 2021 ஆம் ஆண்டுகளின் போது இந்த நிலுவை தவணைப் பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக | இந்தக் கடன் மீதி தாமதமின்றி அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட பிரகாரம் உத்தியோகத்தர்களை களக் கடமைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது. விவசாயிகளுக்கு ஏற்பட்டிருந்த பொருளாதார வசதியீனத்தின் அடிப்படையில் டிறக்டர் தவணைப் பணம் மற்றும் நீர்ப்பம்பி தவணைப் பணம் என்பவற்றை அறவிடுவதற்கு வசதியீனமாக இருந்ததை அறியத்தருகின்றோம். எனினும் 2022 ஆம் ஆண்டின் போது நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நிகழ்ச்சித் திட்டம் ஆரம்ப மட்டத்தில் செயற்படுத்தப்படுகின்றது. | |
| (ஆ) | யப்பான் இன் நிதியுதவி செயற்திட்டத்தின் கீழ் 2006, 2008, 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 02 சக்கர டிறக்டருக்காக அறவிட வேண்டிய பணம் 2015 வரையில் அறவிட வேண்டியிருந்த போதும், ரூபா 116,413,886 தொகையை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020, 2021 ஆம் ஆண்டுகளின் போது இந்த நிலுவை தவணைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக திட்டமிடப்பட்ட பிரகாரம் உத்தியோகத்தர்களை களக் கடமைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்பட்டிருந்த பொருளாதார வசதியீனத்தின் அடிப்படையில் டிறக்டர் தவணைப் பணம் மற்றும் நீர்ப்பம்பி தவணைப் பணத்தை அறவிடுவதற்கு வசதியீனமாக இருந்ததை அறியத்தருகின்றோம். எனினும், 2022 ஆம் | இந்த கடன் மீதி தாமதமின்றி அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆண்டின் போது நிலுவை வருமானத்தை அறவிடுவது தொடர்பாக தனித்தனியாக நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அந்த நிகழ்ச்சித் திட்டம் ஆரம்ப மட்டத்தில் அமுல்படுத்தப்படுகின்றது. | |
| (இ) | 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிட வேண்டியதாக காணப்படுகின்ற ரூபா 2,468,003 தொகை 2KR செயற்திட்ட நீர்ப்பம்பி கடன்பட்டோர் மீதி மற்றும் ரூபா 19,617,600 தொகையான 04 சக்கர டிறக்டர் கடன்பட்டோர் மீதி என்பன மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | இந்த கடன் மீதி தாமதமின்றி அறவிடப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மைகள்

---

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) | செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டதன் பின்னர் உரிய பணிகள் நிறைவடைந்து 10 நாட்களுக்குள் அந்த உபகட்டுநிதி மீண்டும் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,330,830 தொகையான தீர்க்கப்படாத முற்பணம் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | உரிய குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு மிக விரைவில் பணத்தை தீர்த்து முடிவுறுத்துமாறு சகல பிரதி / உதவி ஆணையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ரூபா 1,075,830 முற்பணம் தற்போது தீர்த்து முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் மிகுதி ரூபா 255,000 முற்பணத் தொகையும் 2022 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | செயல்நிமித்த கட்டுநிதி பணிகள் முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்க்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,441,249 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 22,035,319 ஆகும். அதன் பிரகாரம் செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 13,594,070 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஏக்கர் வரி வருமானம் ரூபா 9,832,305 இனால் குறைவடைந்தமை, 02 சக்கர டிறக்டர் வருமானம் ரூபா 2,109,974 இனால் குறைவடைந்தமை மற்றும் மொத்த செலவினம் ரூபா 3,374,183 இனால் அதிகரித்தமை என்பன பிரதான காரணங்களாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் முன்னைய ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 450,000 இருப்பு பற்றாக்குறையொன்று காண்பிக்கப்படுவதுடன் அது தொடர்பாக பரீட்சித்து பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல் 10 வருடங்களுக்கு மேல் தாமதமடைந்திருந்தது. | 1996 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற இருப்பு பற்றாக்குறை தொடர்பாக பரீட்சிப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஒழுக்காற்று பிரிவிற்கும் அறிவிக்கப்பட்டு அதன் பிரகாரம் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | பரீட்சிப்புக்களை விரைவாக மேற்கொண்டு நட்டம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | வயல் காணியொன்று ஏனைய பணிகளுக்காக பயன்படுத்துவதற்கு 2018 ஆம் ஆண்டில் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களிடமிருந்து ரூபா 912,000 கட்டணம் பெறப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கோ அல்லது அந்த பணத்தை மீள செலுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டில் விண்ணப்பித்த 7/11/9/CO/2650 கோவைக்குரியதாக 2018 பெப்ரவரி 12 ஆந் திகதி ரூபா 912,000 சேவைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. அனுமதிப்பத்திரம் வினியோகிக்கப்பட வேண்டிய திகதி வரையிலும் மேல் மாகாணத்தின் வயல் காணியை ஏனைய பணிகளுக்காக ஈடுபடுத்துதல் தடை செய்யப்பட்டிருந்தமையினால் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படாதிருந்ததுடன் 2022 பெப்ரவரி 07 | தேவையான தீர்த்து வைத்தல்கள் தாமதமின்றி மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஆந் திகதி விடயத்துக்குரிய காணி தொடர்பாக களப் பரிசோதனையொன்றை மேற்கொண்டு காணியின் தற்போதைய நிலை தொடர்பான அறிக்கையொன்று கோருமாறு கொழும்பு மாவட்ட உதவி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாத்தறை மாவட்டத்தில் தலல்ல கமநல சேவை நிலையத்தில் உணவகம் மற்றும் கேகாலை மாவட்டத்தில் ருவன்வெல்ல கமநல சேவை நிலையத்தில் உணவகம் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 10 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் தேர்வு செய்யப்பட்ட கேள்விதாரர் கேள்விகளை நிராகரித்தமை, மீண்டும் கோரப்பட்ட கேள்விக்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கீகாரம் வழங்காமை போன்ற காரணங்களின் அடிப்படையில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானதாகும். | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க திட்டமிடப்பட்ட பணிகள் உரிய பிரகாரம் அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களுக்கு டெப் கணனி கொள்வனவு செய்து வழங்குவதற்காக ரூபா 25 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்த வகையில் மாவட்ட மட்டத்தில் தேவையான பயிற்சி | 2021 இன் பாதீட்டின் மூலம் அந்த முன்மொழியப்பட்ட தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட வகையில் மாவட்டத்தில் தேவையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தமையால் அந்தப் பணத்தை பயன்படுத்தி டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் குறித்துரைத்த பிரகாரம் அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தமையால் டிஜிட்டல் மயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தை குறித்துரைத்த பிரகாரம் அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | |
| (இ) | கமநல சேவை நிலையத்திற்காக புதிய கணக்கீட்டு மென்பொருளொன்றை வடிவமைப்பதற்காக ரூபா 2 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் நாட்டில் காணப்பட்ட தொற்று நோய் நிலைமையினை காண்பித்து உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமையின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டில் பெறுகை செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. 2022 ஆம் ஆண்டின் மிகுதி காலத்தில் பெறுகை நடவடிக்கைகளை பூர்த்தி செய்து உரிய மென்பொருளை வடிவமைத்து அமுல்படுத்தும் நிலைக்கு கொண்டு வருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க திட்டமிடப்பட்ட பணிகள் உரிய பிரகாரம் அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிலும், முன்னைய ஆண்டுகளின் போதும் நிதியத்தின் இலக்குகள் மற்றும் பணிகளான விவசாய ஆராய்ச்சி நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப் படாதிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலமும் அதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | விவசாய ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக மனித வளங்கள் எங்களிடம் காணப்படாதிருந்தமையால் எதிர்வரும் ஆண்டுகளின் போது அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். | சட்டத்தில் உள்ள இலக்குகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| புதிய விவசாய கொள்கையை அமுல்படுத்தும் நோக்கில் சேதனப் பசளை உற்பத்தி மற்றும் பயன்பாடுகள் தொடர்பாக 25 | முகங்கொடுப்பதற்கு ஏற்பட்டிருந்த கொவிட் தொற்றுநோய் நிலைமையின் | பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்துதல் |

மாவட்டங்களில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு ரூபா 05 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையை காரணமாக காண்பித்து அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

அடிப்படையில் உரிய உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு முடியாதிருந்த போதிலும் Zoom தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்தி மற்றும் பயன்பாடு தொடர்பாக அறிவித்தல் மற்றும் தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

வேண்டும்.